***

JUDICIAL FORM NO.53
{See Rule-42}

DEPOSITION OF WITNESS

(CHATPTER XXIII CRPC).

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, TENKASI.

| | | |
|---|---|---|
| Calendar | } | |
| Miscellaneous | } | Case No : - CC// 563/2024 |
| | : | Prosecution P.W - 31 |
| NAME | : | அன்னபூரணி |
| FATHER'S NAME | : | |
| VILLAGE | : | |
| TALUK | : | |
| CASTE | : | |
| CALLING | : | |
| RELIGION | : | |
| AGE | : | |

Solemnly affirmed in accordance with the provision of the oaths Act,1969 (Central Act 44 of 1969) on the Tuesday23.06.2025

**முதல் விசாரணை**

நான் தற்போது வெய்க்காலிபட்டியில் குடியிருந்து வருகிறேன். நான் அரசு உதவி பெறும் பள்ளியில் சமையல் உதவியாளராக பணி புரிந்து வருகிறேன். எதிரிகள் மாயவன் மற்றும் மாயவநாதன் ஆகியோர்களை எனக்கு தெரியும். அவர்களிடம் தான் நான் சீட்டு போட்டேன். அசா.1 கிருஷ்ணன் தெரியும். அசா.2 அந்தோணிராஜ் அசா.3 டேவிட் அமல்ராஜ் தெரியாது. அசா.4 செல்வராஜ் தெரியும். அசா.5 ஜோசப்ராஜ் தெரியாது. அசா.6 அருமைகிளி தெரியும். அசா.7 பாலமுருகன் தெரியாது. அசா,8 செல்வராணி அசா.9 பூங்கொடி சூசை தெரியும், அசா.10 சீதாலெட்சுமி தெரியாது. அசா.11 ராமலெட்சுமி அசா.12 பொன்பாண்டி, அசா.13 சாந்தி தெரியாது. அசா.14 குணசீலன், அசா.15 முத்துலெட்சுமிதெரியும். அசா.16 செல்வகுமாரி தெரியும். அசா.17 முருகன், அசா.18 சரோஜா, அசா.19 குமரேசன், அசா.20 மணிராஜ், அசா.21 பொன் சேகர், அசா.22 சுதா, அசா.23 ரவிகுமார், அசா.24 ஜெயஜோதி, அசா.25 ஜானகி, அசா.26 பவளக்கொடி ஆகியோரை தெரியாது. அசா.27

தெய்வகனி தெரியும். அசா.28 செல்வன் தெரியாது. அசா.29 குற்றாலராமசுந்தரம் மகன் மாயவன் தெரியாது. அசா.30 அருள்ஜெலஸ்டீன் தெரியும். 2010ம் வருடத்திலிருந்து ஆஜர் எதிரியும், வாத்தியாரும் சீட்டு நடத்தினார்கள். 7 குழுக்களாக சீட்டு நடத்தினார்கள், நான் 7 குழுக்களிலும் சீட்டு போட்டிருந்தேன். ரூ.61000 சீட்டில் 2 சீட்டும், ரூ.60000 சீட்டில் 1 சீட்டும், ரூ.30000 சீட்டில் 2 ம் ரூ.33000 சீட்டில் 2 ம் மொத்தம் 7 சீட்டுகள் போட்டிருந்தேன். மொத்தம் ரூ.82160 சீட்டு பணம் கட்டினேன். சீட்டு பணத்தை மாயவன் கோவிலில் வைத்து வாரவாரம் ஞாயிற்றுக்கிழமை 7 மணிக்கு பிரிப்பார்கள். மாயவன் நோட்டில் வரவு வைப்பார். ஆஜர் எதிரி பிரிப்பார். பின்னர் சீட்டு பணம் கட்ட சென்ற போது அவர்கள் இல்லை, 9 மாதம் கழித்து வந்தார்கள். கிருஷ்ணன் என்பவர் சீட்டு பணம் கேட்டு சண்டை போடுகிறார் என்றும் நீங்களும் உங்கள் சீட்டை கேட்க போங்கள் என்று சொன்னார்கள். கிருஷ்ணன் நோட்டை கேட்டதற்கு நோட்டை தூரபோட்டாச்சு, எரிச்சாச்சு என சொன்னார்கள்.

அதன் பின்னர் காவல்நிலையம் சென்று கிருஷ்ணன் புகார் கொடுத்தார். நான் பள்ளியில் வேலைக்கு சென்று பீடி சுற்றி மிகவும் கஷ்டப்பட்டு சீட்டு பணம் கட்டினேன். என் கணவர் இறந்து 13 ஆண்டுகள் ஆகிறது. உழைத்த பணத்தை வீணாக்க கூடாது என்பதற்காக எதிரிகளிடம் சீட்டு போட்டோம். இதுவரை சீட்டு பணத்தை தரவில்லை. போலிஸார் என்னை விசாரித்தார்கள்.

எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர், குறுக்கு விசாரணை செய்ய போதிய வாய்ப்பு வழங்கப்பட்டும் குறுக்கு விசாரணை செய்யப்படாததால் குறுக்கு விசாரணை முடிக்கப்படுகிறது.

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

//Sd//- Tmt.S.Muthulakshmi
Judicial Magistrate,
Tenkasi

***

JUDICIAL FORM NO.53
{See Rule-42}

DEPOSITION OF WITNESS

(CHATPTER XXIII CRPC).

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, TENKASI.

| | | |
|---|---|---|
| Calendar | } | |
| Miscellaneous | } | Case No : - CC// 563/2024 |
| | : | Prosecution P.W - 30 |
| NAME | : | அருள்ஜெலஸ்டீன் |
| FATHER'S NAME | : | |
| VILLAGE | : | |
| TALUK | : | |
| CASTE | : | |
| CALLING | : | |
| RELIGION | : | |
| AGE | : | |

Solemnly affirmed in accordance with the provision of the oaths Act,1969 (Central Act 44 of 1969) on the Tuesday23.06.2025

**முதல் விசாரணை**

நான் தற்போது வெய்க்காலிபட்டியில் குடியிருந்து வருகிறேன். நான் டீக்கடை வைத்து வியாபாரம்செய்து வருகிறேன். எதிரிகள் மாயவன் மற்றும் மாயவநாதன் ஆகியோர்களை எனக்கு தெரியும். என்னுடைய டீக்கடைக்கு அடிக்கடி டீக்குடிக்க வருவார்கள். அசா.1 கிருஷ்ணன், அசா.2 அந்தோணிராஜ், அசா.3 டேவிட் அமல்ராஜ், அசா.4 செல்வராஜ், அசா.5 ஜோசப்ராஜ், அசா.6 அருமைகிளி, அசா.7 பாலமுருகன், அசா,8 செல்வராணி, அசா.9 பூங்கொடி சூசை, அசா.10 சீதாலெட்சுமி, அசா.11 ராமலெட்சுமி, அசா.12 பொன்பாண்டி, அசா.13 சாந்தி, அசா.14 குணசீலன், அசா.15 முத்துலெட்சுமி, அசா.16 செல்வகுமாரி, அசா.17 முருகன், அசா.18 சரோஜா, அசா.19 குமரேசன், அசா.20 மணிராஜ், அசா.21 பொன் சேகர், அசா.22 சுதா, அசா.23 ரவிகுமார், அசா.24 ஜெயஜோதி, அசா.25 ஜானகி, அசா.26 பவளக்கொடி, அசா.27 தெய்வகனி, அசா.28 செல்வன், அசா.29 மாயவன் ஆகியோர்களை தெரியும், சீட்டு கட்ட எதிரி மாயவனிடம் வருவார்கள். 2010ம் வருடத்திலிருந்து எதிரிகள் மாயவன்

மற்றும் மாயவநாதன் சீட்டு பிரித்தார்கள். 7 குழுக்களாக நடத்தி சீட்டு பிடித்தார்கள். நான் ரூ.60000 க்கு 1 சீட்டும், ரூ.62000 க்கு ஒரு சீட்டும் எதிரிகளிடம் போட்டேன். ரூ.60000 சீட்டில் 38 வாரமாக ரூ.38000 ரூபாயும் ரூ.62000 சீட்டில் 118 வாரங்கள் ரூ.43,300 எதிரிகளிடம் கட்டி இருந்தேன். சீட்டு பணத்தை எதிரிகள் மாயவன் கோவிலில் வைத்து ஞாயிற்றுக்கிழமை தோறும் இரவு 7.00 மணிக்கு வாங்குவார்கள்.

பின்னர் எதிரிகள் சீட்டு பிரிக்கவில்லை. அவர்கள் ஊரை விட்டு சென்று விட்டதாக சொன்னார்கள். நாங்கள் தேடி பார்த்தோம்.கோவிலில் ஆள் இல்லை. நாங்கள் சிறுக சிறுக சேமிப்பதற்காக எதிரிகளிடம் சீட்டு போட்டோம் 2019 ம் வருடம் 10 வது மாதம் 22 ம் தேதி வந்தார்கள். கிருஷ்ணன் என்பவர் எதிரிகள் வந்தது தெரிந்து சீட்டு பணம் கேட்க சென்றபோது அவர்கள் இருவருக்கும் தகராறு ஏற்பட்டது. அதில் எதிரிகள் சீட்டு பணம் கட்டியதற்கு எந்த ஆதாரமும் கிடையாது எங்கு வேண்டுமானாலும் செல்லுங்கள் என்று சொல்லி விட்டார். இது வரை எங்கள் சீட்டு பணம் தரவில்லை. சீட்டு பணம் கொடுக்கும் போது பணத்தை வாங்கி கொண்டு நோட்டில் எழுதி கொள்வார்கள். நோட்டு எரிந்து விட்டதாக சொன்னார்கள். எதனால் அவர்களிடம் சீட்டு போட்டேன் என்றால் எதிரி மாயவநாதன் ஆசிரியர் என்பதால் அவரை நம்பி சீட்டு போட்டோம். கிருஷ்ணன் என்பவர் கேட்கும் போது சண்டை வந்ததால் புகார் கொடுக்க எல்லோரும் சென்றோம். கிருஷ்ணன் என்பவர் புகார் கொடுத்தார். நாங்கள் வெளியே நின்றோம், போலிஸார் வெளியே வந்து எல்லோரையும் விசாரித்தார்கள். நாங்கள் சீட்டு போட்டதை சொன்னோம். விசாரித்ததை எழுதி கொண்டார்கள்.

எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர், குறுக்கு விசாரணை செய்ய போதிய வாய்ப்பு வழங்கப்பட்டும் குறுக்கு விசாரணை செய்யப்படாததால் குறுக்கு விசாரணை முடிக்கப்படுகிறது.

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

//Sd//- Tmt.S.Muthulakshmi
Judicial Magistrate,
Tenkasi